நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 362/2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்திரா |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜேந்திரன் |
| கிராமம் | : | பொன்நகர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 02–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.30 PM

1. எனது மருமகனுக்கும் எனது மகளுக்கும் போனில் வாக்குவாதம் ஏற்பட்டதால்தான் பிரச்சனை ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. தொலைபேசி மூலமாக சம்பவத்தின்போது எனது மருமகன் எனது மகளை திட்டினாரா என்று

எனக்கு தெரியாது. சம்பவம் நடைபெற்றபோது நான், எனது கணவர் ராஜேந்திரன், எனது இளையமகள் கௌசல்யா, பேரன் ஜஷ்வீன் மற்றும் அக்கம்பக்கத்தினர் சுமார் 20 பேர் இருந்தனர்.

2. சம்பவம் நடைபெற்ற நேரம் இரவு 07.00 –08.00 மணியிருக்கும். நாங்கள் வசித்து வரும் வீடானது 4 குடும்பம் வசிக்கும் வகையில் உள்ளது. சம்பவம் நடைபெற்றபோது வீட்டிற்குள் எனது மருமகன் மட்டும்தான் வந்தார். எங்கள் வீட்டிற்குள் வந்து வீட்டிற்குள் வைத்துதான் கெட்டவார்த்தையால் பேசி அடித்தார். ஒரு கையால் எனது மகளின் கழுத்தை நெறித்து மறு கையால் தலையில் அடித்தார்.

3. அதன்பிறகு நான்தான் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் ஆமாம். எனது மகளுக்கு கீறல் காயம் ஏற்பட்டிருந்தது. சம்பவம் நடக்கும்போது நான் சொன்ன 20 நபர்களில் எனது உறவினர்களான ரமேஷ்குமார், சகுந்தலா, உமா ஆகியோர் விலக்கி விட்டனர். அதில் ரமேஷ்குமாரை எனது மருமகன் அடித்துவிட்டார்.

4. மேற்படி ரமேஷ்குமார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் இல்லை. அவரை எனது மருமகன் ஒரு அடிதான் அடித்தார். காவல் நிலையத்திற்கு அக்கம்பக்கத்தினர் தான் புகார் கொடுத்தனர். ஆனால் புகாரை யார் கொடுத்தார்கள் என்று தெரியாது. சம்பவம் நடந்தநேரம் இரவு 08.00 மணியிருக்கும். போலீசார் 08.15 மணிக்கு வந்தனர். காவல் நிலையத்தில் இருந்து போலீசார் வந்தபிறகுதான் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம்.

5. சம்பவத்திற்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்திற்கு முன்னால் இருந்து எனது மகளுக்கும் மருமகனுக்கும் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கும், இந்நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை வழக்கும் இருந்து வந்தது எனக்கு தெரியும். இது தொடர்பாக ஏதேனும் பிரச்சனை இருந்து வந்ததா என்றால் தொலைபேசியின் மூலம் பேசிக்கொள்வார்கள்.

6. சம்பவத்தன்று எனது மருமகன் எனது மகளை அழைத்துசெல்லதான் வந்தாரா

என்றால் இல்லை. சம்பவத்தின்போது நான் தடுக்க சென்றபோது என்னையும் கழுத்தை பிடித்து தள்ளிவிட்டார். நான் கீழே விழவில்லை. எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

7. உண்மையில் எதிரி எனது மகளை அழைத்து சென்று சேர்ந்துவாழத்தான் வந்தார் என்றாலும் நாங்கள்தான் எங்களது மகளை அவருடன் அனுப்பி வைக்க விருப்பம் இல்லாமல் நாங்களாக பிரச்சனை செய்து பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.45 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**